‘காமராஜ்கபே’ கிடைத்தால்போதுமா!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The “Nam Nadu”: A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா | சென்னை: ஆடிமீ 27உ புதன் (11—8—54) | மலர்: 2
இலங்கையில் 10 சதம் | வெளியூர்: ஆடிமீ 28உ வியாழன் (12—8—54) | இதழ்: 50

‘நிறுத்து’ என்றால் நின்ற நாள் சென்று விட்டது!

திரு—தமிழர் அறப்போரின் முக்கிய கட்டம்!

கலந்து பேசி, களம் காண்போம்!

திரு—தமிழர் கிளர்ச்சி குறித்து தி. மு. கழகப் பொதுச்செயலாளர்

“திரு—தமிழர் அறப்போரில் ஒரு முக்கியம் என்னவென்றால், இதுவரை இந்த இந்திய நாட்டில் நடைபெற்ற கிளர்ச்சிகள் எல்லாம், நேரு பண்டிதர், ‘நிற்கட்டும் கிளர்ச்சி,’ என்று கூறினால், ‘இதோ நிறுத்திவிட்டேன் கிளர்ச்சியை,’ என்று தான் கூறிக்கொண்டிருந்தனர்; ஆனால், இன்று திரு—தமிழர் கிளர்ச்சி, பண்டிதர், ‘நிற்கட்டும்’ என்று சொன்ன பிறகும், நிற்கவில்லை; தொடர்ந்து நடைபெறுகிறது.”

“திரு—த. நா. காங்கிரஸ் தலைவர் நேசமணி இன்று விடுதலையாகியுள்ளார். அவரை நமது நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் வி. எம். ஜான் சந்தித்து, போராட்டம் தொடர்ந்து நடைபெறுவது பற்றி விவாதித்து, ஒரு நல்ல முடிவு காணுவார்கள்; அப்படி அவர்கள் முடிவு செய்து, போராட்டத்தில் ஈடுபட தமிழ் நாட்டிற்கு அழைப்பு அனுப்பினால், அப்போது மீண்டும் உங்களைச் சந்திப்பேன்; அந்தப் போரில் கலந்துகொள்ள நீங்கள் ஏராளமாக முன்வர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்,”

—என்று, சென்னை மவுண்ட் ரோடு தி. மு. கழகச் சார்பில் 10-8-54 அன்று நடைபெற்ற ஆண்டு விழாப் பொதுக்கூட்டத்தில் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

“இன்று திரு—தமிழர்கள், உரிமைக்காகப் போரிடுகிறார்கள்; அவர்களின் அவல நிலை கண்டு நமக்கு உள்ளம் கொதித்தது! நாம்தானே அவர்கள் போராட்டத்தை ஆதரித்து, தாயகத் தமிழகத்திலிருந்து சென்று, அங்குள்ள தோழர்களைக் கண்டு பேசி, அடையாள மறியலில் ஈடுபடுகிறோம்! நாம் அந்தப் போரில் ஈடுபட்டதினால் இன்று 110 பேர் கைதாயினர்.

திருத்தணி கிளர்ச்சியில் கூட முதன் முதல் போர்க்களம் புகுந்தவர் ரஷீத் என்ற திருத்தணித் தோழரும், ஏ. எல். சி. கிருட்டிணசாமி என்ற தோழரும் தானே! அதன் பிறகு போராட்டத்தில் இறங்கியவர்கள், ‘தி. மு. கழகக் கொடியை கீழே போட வேண்டும்,’ என்று கட்டுக்காவல் போட்டதினால்தானே நமது தோழர்கள் போரில் ஈடுபடுவதை நிறுத்தினார்கள்?

திரு—தமிழர் பகுதி மக்களின் போராட்டம் குறித்து திரு. த. நா. காங்கிரஸ் தலைவர்களையும், அங்குள்ள நமது கழகத் தோழர்களையும் கண்டு பேசி நடந்த 6-ந் தேதியன்று அடையாள மறியல் செய்வது என்ற முடிவுக்கு வந்தோம்.”

வேட்டையாடும் வீரன்!

“காட்டுக்குள் நுழைந்த பிறகு எது எதிர்ப்பட்டாலும் எதிர்த்து வேட்டையாடுபவன் தான் வீரனே அன்றி, காட்டுக்குள் நுழைந்து ஒரு மோட்டு எலியைத் தான் வேட்டையாடுவேன் என்று சொல்பவர்கள், காட்டுக்குள் நுழைந்தே இருக்க வேண்டாமே! அதுபோலவே நாட்டு ஆட்சியில் உள்ள எல்லாக் கேடுகளையும்தான் போக்கியாக வேண்டும்.”

—மவுண்ட் ரோட் பொதுக் கூட்டத்தில் அண்ணா

நிரந்தரப் போர்ப்படை

“தி. மு. கழகம், ஒரு நிரந்தரமான போர்ப் படை—சமுதாயச் சீரழிவுகளைப் போக்கவும், அக்கிரமத்தை அழிக்கவும், அநீதியை ஒழிக்கவும், போரிடத் தயங்காத போர்ப் படை—என்கிற சூட்சமத்தை, உண்மையை, மாற்றார் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.”

—மவுண்ட்ரோடு பொதுக் கூட்டத்தில் அண்ணா

மொராக்கோ நிலை

உலக அமைதிக்கு உலைவைக்கும்!

கெய்ரோ, ஆக. 10—அரேபிய லீகின் பொதுச் செயலாளரான அப்டெல் சாலெக் ஹசௌனா, “மொராக்கோவில் இன்றுள்ள நிலை உலக அமைதியையும் பாதுகாப்பையும் அச்சுறுத்துவதாயிருக்கிறது” என்று ஐ. நா. சபைக்கு தந்தி மூலம் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த தந்தி, “மொராக்கோவில் பிரெஞ்சுக்காரர்களின் அடக்குமுறை அதிகமாயிருக்கிறது” என்ற குற்றஞ்சாட்டியிருப்பதுடன், ஐ. நா. சபை அந்த அடக்குமுறையை ஒழிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டுள்ளது.

கவர்னர் சம்பளப் பிரச்சினை!

“இன்று மக்களை வாட்டி வதைக்கும் பல பிரச்னைகளைத் தீர்க்க நாம் போராட்டம் நடத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். அப்படிப் பல பிரச்னைகள் உள்ளன. கவர்னர் சம்பளச் செலவும் பிரச்னை அதில் ஒன்று. கவர்னர் பெறுகிற பொன்னைச் சம்பளத்தைக் குறைப்பதற்காக நடவடிக்கை எடுப்பது குறித்து, நான் இப்போது மக்களின் கருத்தை அறிந்து கொண்டிருக்கிறேன். அவர்களின் அபிப்ராயங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டதும், கவர்னர் சம்பளக் குறைப்புக்காக, கிளர்ச்சி துவக்கப்படலாம்.”

—மவுண்ட்ரோடு பொதுக் கூட்டத்தில் அண்ணா

இல்லம் வேண்டும்! இன அரசு வேண்டும்!

முதலமைச்சர் விரும்பும் ஒற்றுமை!

அது கிடைக்க அவர் கொள்ளவேண்டிய போக்கு என்ன?

அண்ணாதுரை விளக்கம்

“ஆச்சாரியாரின் ஆகாத கல்வித் திட்டத்திற்கு எழுந்த எதிர்ப்பு உணர்விற்கு மதிப்பளித்து கல்வித் திட்டத்தைக் கைவிட்டார் என்பதற்காக மட்டுமே காமராசரை தி. மு. கழகம் பாராட்டிற்று. அதற்காகவே, காமராசரோ, காங்கிரசோ, மற்றவரோ, தி. மு. கழகத்தை தங்கள் சட்டைப் பைக்குள் போட்டுக்கொள்ள முடியாது; நான் அவர்களுக்குத் தெளிவாகவே சொல்லிவிட விரும்புகின்றேன்—குடியேற்றம் தேர்தலைப் பார்த்து—அந்த மாய மானைப் பார்த்து யாரும் ஏமாந்து விடவேண்டாம் என்று!

“காமராசர் நம்மோடு ஒற்றுமை கொள்ள உகந்தவராவார் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை; அவரோடு நாம் ஒற்றுமை கொள்ள அவர் போதுமான சான்றுகளைத் தரவில்லையே நமக்கு? திராவிடரின் இதயகீதம் குறித்து, ‘திராவிட நாடு திராவிடர்க்காக வேண்டும்,’ எனும் நமது லட்சியம் குறித்து. ‘கவனிக்கிறேன்; யோசிக்கிறேன்; வடநாட்டு ஆதிபத்தியம் பற்றிச் சிந்திக்கிறேன்,’ என்று ஏதாவது ஒரு சொல்கூடக் கூறவில்லையே!”

“அவர் எண்ணம் எல்லாம்—நான் தெரிந்துகொண்டிருக்கிறபடி—அரசியல் கட்சிகளிடையே மோதுதல் கூடாது; ‘ஒரு கட்சி மற்ற கட்சியுடன் மோதிக்கொள்ளக்கூடாது என்பதற்காக மட்டுமே அரசியலில் ஒற்றுமை வேண்டும்,’ என்று விரும்புகிறார் எனத் தெரிகிறது. தஞ்சையில், கம்யூனிஸ்டு கட்சி அல்லாத மற்ற கட்சியினர் எல்லாம் ஒன்றுபட வேண்டும் என விரும்புவதாகத் தெரிவித்திருக்கிறார்.

“நான் அவரைக் கேட்டுக் கொள்கிறேன், பதில் சொல்லுமாறு!—ஒற்றுமை எந்த வகையில்? எந்த அடிப்படையில்? எதற்காக? எத்தனை காலத்திற்கு? ஏன்? யாருடைய திட்டத்தை யார் விட்டுக்கொடுத்து ஒற்றுமையாவது?—இவைகளுக்கு எல்லாம் நமக்குப் பதில் தேவை.”

“சாடையாகவாவது ‘திராவிட நாடு கோரிக்கையை நான் மதிக்கிறேன்,’ என்று சொல்ல வேண்டாமா காமராசர்? சொல்லுவாரா? சொல்லுவதானால் ஒற்றுமை கிடைக்கும். அதைவிட்டு, கல்வித் திட்டத்தைக் கைவிட்டார் என்பதற்காக நாம் பாராட்டியதை மட்டுமே எண்ணி, ‘நாம் பிரிவினைத் திட்டத்தைக் கைவிட்டுவிடுவோம்,’ என்று அவர் எண்ணினால், அவர் ஏமாறுவார், நிச்சயமாக! நாம் பாராட்டினோம் என்பதாலேயே அவர், நம்மை, தனது சட்டைப் பைக்குள் போட்டுக்கொள்ள முடியாது!”

—இவ்வாறு, தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள், 10—8—54 அன்று, சென்னை மவுண்ட் ரோடு தி. மு. கழகத்தின் மூன்றாவது ஆண்டு விழாப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சென்னை, மவுண்ட்ரோடு (39-வது வட்டப்) தி. மு. கழகக் கிளையின் சார்பில் 10-8-54 அன்று மாலை 6-30 மணிக்கு ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அந்த வட்டக் கிளையின் மூன்றாவது ஆண்டு விழாவை ஒட்டி, கழகக் கட்டிடத்திற்கருகில், எல்லிஸ் ரோட்டில் நடைபெற்ற அந்தப் பொதுக்கூட்டத்திற்கு தோழர் கா. பாண்டியன் அவர்கள் தலைமை வகித்தார். தோழர்கள் கண்ணதாசன், என். வி. நடராசன் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

கூட்டத்திற்கு, இடம் நெருக்கடியானதாக அமைந்திருந்தும், பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் பேசியதாவது:—

“மவுண்ட் ரோடு கிளை தி. மு. கழகத் தோழர்கள் இந்த நெருக்கடியான இடத்திலே, வசதியான மைதானம் கிடைக்காததால், இந்த ஆண்டு விழாப் பொதுக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார்கள்.

ஆச்சாரியார் புகுத்திய கல்வித் திட்டத்தை நாம் எதிர்க்கிறோம் என்பதை, நமது ஆதரவு பெற்ற சட்ட சபை உறுப்பினர்களிடம் எடுத்துச் சொல்வது என்ற நமது ஜனநாயக ரீதியான முயற்சியை அரசாங்கம் தடை செய்தபோது, அந்தத் தடையை மீறி, இந்த வட்டத்தைச் சேர்ந்த தோழர்கள் முதன் முதலில் சிறை புகுந்தனர். அவர்கள் சிறைச்சாலையில் இருந்தபோது நாங்களும் சிறைச்சாலைக்குச் சென்றோம். அந்த நேரத்தில் எங்கள் வீட்டிற்கு வந்து நாள் முழுதும் பேசிக்கொண்டிருந்து

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

சென்னை 11—8—54 புதன்

அழைப்பு கிடைக்கும்!

திரு—கொச்சியின் பிணைக் கப்பட்டுக் கிடக்கும் தமிழ்ப் பகுதிகளைத் தாய்த் தமிழகத்தோடு இணைக்கும் அறப்போர், நேரு பண்டிதர் வெறித்த புருவத்தைக் காட்டிய பிறகும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது; மகிழ்கிறோம்!

நேரு பண்டிதரின் பேச்சுக்கு இருந்த சக்தி இந்த அளவுக்குச் சிதைந்துவிட்டதே என்ற அற்பத்தனமான பூரிப்பால் அல்ல, நாம் மகிழ்வது! திரு—கொச்சி தமிழர்கள், தங்கள் கடமையை நிறைவேற்றுவதில் அச்சம், தயை தாட்சண்யம் என்பவைகளுக்குக் கட்டுப்பட மறுக்கும் அறப்போர் உள்ளம் கொண்டுவிட்டனர்; எனவே, அவர்கள் தொடுத்துள்ள விடுதலைப் போரில் வெற்றி நிச்சயமாகப் பெறுவர் என்பதால், பெருமை கலந்த மகிழ்வெய்துகிறோம்!

நேரு பண்டிதர், ஏற்கனவே கண்டிப்பான குரலில்தான் பேசிவிட்டிருக்கிறார்; அவர் கனிவுடன் பேசுவதை மறந்து நாட்கள் பலவாகிவிட்டன; ஒருவேளை, டில்லியில் அரசோச்ச அமர்ந்ததும், அவருக்கு பாதுஷாக்களின் சுபாவம் தானாக வந்து தொலைந்ததோ, யாதோ, நாமறியோம்!

இப்போதெல்லாம் நேரு பண்டிதர், எவ்வளவு தூய்மையான உள்ளத்துடன், எவ்வடிமட்ட தியாகிகள் எவ்வளவு புனிதமான கொள்கைக்காகப் போரிட்டாலும், சீறிச் சீறிப் பேசுவதையும், சிறு சொல் வீசிக் கண்டிப்பதையும், வாடிக்கையாக்கிக் கொண்டார். எனவேதான், திரு—கொச்சி தமிழர்கள் ஏறத்தாழ ஆயிரவர் அறப்போரில் ஈடுபட்டு, அடக்குமுறைக் கொடுமைகளுக்கு ஆளாகி, சிறை சென்றது கண்டு, சிந்திக்க முன்வராமல், சீறலானார்; 'நிறுத்துங்கள்'—என்று ஓர் 'பத்வா' பிறப்பித்தார்!

“நாம் உறுமிய பிறகு, மீறும் ஆற்றல்' இதுகளுக்கு' எங்கிருந்து பிறக்க முடியும்; இடி கேட்ட நாகமாவர்; புயல் கண்ட புள்ளினமாவர்; போர் நிறுத்தங்களும்; மன்னிப்பும் கேட்பர்” — என்றெல்லாம் அவர் மனக்கணக்குப் போட்டிருப்பார். ஆனால், அறப்போர் வீரர்கள், 'அஞ்சுவதோ அயர்வதோ, பெரியவர் கூறிவிட்டாரே—அதனை எங்ஙனம் மீறுவது என்றெண்ணி கைபிசைந்துகொள்வதோ, தாங்கள் மேற்கொண்டுள்ள தூய காரியத்துக்கு இழுக்கையும், தாயகத்துக்குத் தாழ்வையும் உண்டாக்கும்' என்பதை உணர்ந்து, நேரு பண்டிதர் பெரியவர்; ஆனால் எமது நோக்கம் மிக மிகப் பெரியது; அவர் கண்காட்டும் வழி செல்லக் காத்துக் கிடந்தவர்தாம் நாங்கள்; ஆனால், எமது தாயகம் அழைக்கும்போது அவர் தடுத்தாலும் நின்றுவிடமாட்டோம்; பண்டிதர் பெரியவர், ஆனால், விடுதலை உணர்ச்சி மிக மிகப் பெரியது' என்று எண்ணினர்; அறப்போர் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

'அறப்போர் பலாத்காரமாக உருவெடுக்குமானால், அடக்கியே தீருவோம்' என்று பட்டம் தாணுப் பிள்ளை அறிவித்துவிட்டார்! பனம்பள்ளி கோவிந்த மேனன் பக்க மேளம் கொட்டி நிற்கிறார்!

அறப்போரில் ஈடுபடுபவர்கள், பலாத்காரமாக அதை நடத்திச்செல்ல எண்ணுபவர்களல்ல—அதனை நடத்திச் செல்லும் தலைவர்கள், பொறுப்புணர்ச்சியுள்ளவர்கள்—பொது வாழ்வுத் துறையினருக்குத் தேவையான பண்புகள் அமையப் பெற்றவர்கள்—எனவே, அவர்கள் ஒரு போதும் பலாத்காரத்துக்கு இடமளிக்க மாட்டார்கள்!

ஆனால், பட்டம் ஏன் இந்த எச்சரிக்கை விடவேண்டும்? காரணமிருக்கிறது! அறப்போரைக் கடுமையான அடக்குமுறை கொண்டு அழித்துவிடத் திட்டமிட்டு, முன்கூட்டியே அதற்கு ஒரு காரணம் தேடுகிறார்!! எதேச்சாதிகாரியின் நெடுநாளைய தந்திரம் அது! ஆள்பவர்களே பலாத்காரத்தை ஏவிவிட்டு, பழியை அறப்போர் வீரர்மீது சுமத்தி, 'பலாத்காரம் தலைவிரித்தாடுகிறது,' என்று சாக்குக் கூறி, 'பலாத்காரத்தை எந்தச் சர்க்காரும் சகித்துக் கொண்டிராது,' என்று எக்காளமிட்டு, பிறகு, கொடிய அடக்குமுறையை அவிழ்த்துவிடுவது என்பது, எதேச்சாதிகார முறை! அதனை அனைவரும் நன்கு அறிவர்.

திரு—கொச்சி தமிழர்கள், எதையும் தாங்கும் இதயம் பெற்றவராகிவிட்டனர்; நேருவின் வெறித்த புருவத்துக்கு அஞ்ச மறுப்பவர்கள்; இனி, பட்டத்தின் பதட்டத்துக்கா அஞ்சப்போகிறார்கள்!

விடுதலைக்கு உரிய காணிக்கையைச் செலுத்த அவர்கள் தயாராகி விட்டனர்! வீறு கொண்டெழுந்துள்ள அவர்களுக்குத் துணை நிற்பதைப் பெருமைக்குரிய கடமை என்று கருதிடும் தமிழர்கள், தாயகத்தில் எண்ணற்றவர்கள் எண்ணற்றவர்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம், இந்தத் தூயத் தொண்டிலே தன் பங்கைச் செலுத்த முற்பட்டுவிட்டது. அடையாள மறியல், அமைதியான முறையில், ஆனால் அனைவருக்கும் ஆர்வம் தரும் வகையில் செவ்வனே நடந்தேறி இருக்கிறது; 110 வீரர்கள் அறப்போரில் ஈடுபட்டனர்; பலர் மீது வழக்குத் தொடுத்துச் சிறையில் தள்ள, பட்டம் சர்க்காருக்குத் துணிவு பிறக்கவில்லை; சிலருக்கு மட்டும் மூன்று திங்கள் தண்டனை தந்திருக்கிறது!

திராவிட முன்னேற்றக் கழகம், இந்த அடையாள மறியலைச் செய்து காட்டியதோடு, கைகட்டி வாய் பொத்தி இருந்துவிடப்போவதில்லை. இனிச் செய்யவேண்டிய பெரும் பணிக்கு, செலுத்த வேண்டிய பெரும் பங்குக்கு, ஈடேற வேண்டிய தொண்டுக்கு, இந்த அடையாள மறியல், வெறும் முன்னறிவிப்பு—வேறில்லை!

இந்தப் பிரச்சினையில், திராவிட முன்னேற்றக் கழகம் இனிச் செய்யவேண்டியது, சாமான்யமானதல்ல! அதற்கான வலிவும் அதற்கு உண்டு என்பதை நாடு அறியும்! நையாண்டி பேசி தங்கள் நிலையைத் தாங்களாகவே குலைத்துக் கொள்ளும் குத்தல் குடைச்சல் பேர்வழிகளும் அறிவர்!

அறப்போரில் ஈடுபட்ட திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் காட்டிய ஆர்வத்தையும், கட்டுப்பாட்டு உணர்ச்சியையும், அவர்களின் மூலம், திரு — கொச்சி தமிழர்களிடையே மலர்ந்துள்ள மகிழ்ச்சியையும், எழுச்சியையும் பாராட்டி, அந்தப் பகுதியின் உள்ள இதழ்கள் எல்லாம் எழுதியுள்ளன.

நமது தோழர்கள், இந்த அரும் பாராட்டுதலுக்குப் பாத்திரமானது கண்டு நாம் மகிழ்கிறோம். அநீதியை ஒழித்திடவும், அக்கிரமத்தை அழித்திடவும், அறம் நிலை பெறச் செய்யவும், உரிமையைக் காத்திடவும், எங்கெங்கு நன்முயற்சி, தக்கோரால் எடுக்கப்படுகிறதோ, அங்கெல்லாம், தி. மு. க. நிற்கும்! எங்கெங்கு எதேச்சாதிகாரம் தன் கோரப்பற்களைக் காட்டுகிறதோ, அங்கெல்லாம் தி. மு. கழகம் துணிவுடன் நிற்கும்; தொல்லைகளைத் தாங்கிக்கொள்ளும்; அறப்போர் நடாத்தும்!

அம்முறையில், திரு — கொச்சி தமிழர்களின் அறப்போரில் மேலும் ஈடுபட வேண்டிய பெரும் பொறுப்பு தி. மு. கழகத்திற்கு இருக்கிறது.

எம்முறையில் போர் அமைதல் வேண்டும்—போர் நடாத்தும் குழுவின் அமைப்பு எங்ஙனம் இயங்குதல் வேண்டும்—என்பவைகளை, இன்று, சிறையினின்றும் விடுதலை பெற்ற திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் நேசமணி அவர்களுடன் நமது தோழர்கள் கலந்து பேசி, திட்டமிடுவர் என்று நம்புகிறோம்.

பெரியதோர் வாய்ப்பு நமக்குக் கிடைக்க இருக்கிறது! நமது தாயகத்துக்குத் தொண்டு செய்யும் அரிய வாய்ப்பு, அறம் தழைக்கவும், அக்கிரமம் அழிந்துபடவும் பணிபுரியும் பொன்னான ஓர் வாய்ப்பு கிடைக்க இருக்கிறது!

களம் பல கண்டோரே! போர்த் தழும்பைப் புகழின் சின்னம் எனக் கொண்ட வீர மரபினில் வந்தோரே! அழைப்பு கிடைக்கும் நந்நாளை ஆவலுடன் எதிர்நோக்கியபடி, ஆர்வத்துடன் இருப்பீராக !!

பொது மக்கள் அருஞ் செயல்கள் செய்ய முடியும் என்னும் உறுதியான கருத்தை அடிப்படையாகக்கொண்டதே மக்களாட்சி!

செஞ்சீன மீது படையெடுப்பு?

கம்யூனிச ஆதிக்கத்தைத் தடுக்க யோசனையாம்!

ரஷ்யாவிலிருந்த யு. எஸ். தூதுவரின் போர்க் கூச்சல்!

அமெரிக்க யுத்த வெறிக்குச் சான்று;

நியூயார்க்—

“செஞ்சீன மீது உடனடியான தாக்குதல் ஒன்றைத் துவக்க வேண்டும்; அந்தத் தாக்குதலுக்கு மிகச் சிறிய எண்ணிக்கையுள்ள அமெரிக்க இராணுவம் போதுமானது; கொரியர்களும், பார்மோசாவில உள்ள சீனத் துருப்புகளும், தாக்குதலைத் தொடர்ந்து நடத்துகிற பொறுப்பை ஏற்றுக் கொள்வார்கள்,”

இவ்வாறு, சோவியத் ரஷியாவில் அமெரிக்காவின் தூதுவராயிருந்த வில்லியம் புல்லிட் என்பவர் 'லுக்' என்ற இதழில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

அக்கட்டுரையில், மேலும் அவர் குறிப்பிடுவதாவது:—

“பார்மோசாவில் உள்ள சீனர்கள், சீனாவில் இருக்கும் 45 கோடி மக்களையும் திரும்பவும் சுதந்திர உலகின் அணிவகுப்பில் கொண்டுவரக் காத்திருக்கிறார்கள். அவர்கள் தங்களுடையவும் நம்முடையவும் சுதந்திரத்திற்காக உயிரைத் தரவும் சித்தமாயிருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான அமெரிக்க உதவி எல்லாம், இப்போது கொரியாவில் உள்ள அமெரிக்கத் துருப்புகளின் மூலமாகக் கிடைக்க வழி உண்டு. சீனக் கடற்கரைகளில் காவல் புரிய அமெரிக்கக் கப்பல் படையும், சில குறிப்பிட்ட இடங்களைக் குண்டு வீசி நாசம் செய்ய அமெரிக்க விமானங்களும் உதவினால் போதுமானது.

சோவியத் ரஷ்யாவை கடைசிவரை அடித்து நொறுக்கினால்தான் அமெரிக்கா நீர்வளிக்குண்டுகளினால் ஏற்படும் அழிவைத் தவிர்க்க முடியும். இதற்கு இரண்டு வழிகள்தான் உண்டு.

(1) சீனாவை, “கம்யூனிஸ்டுகளின் பிடியிலிருந்து விடுவிப்பதின் மூலம் 'கிரெம்ளின்' பலத்தைக் குறைப்பது.

(2) சோவியத் ரஷ்யாவின் அணு உற்பத்திச்சாலைகளில் நீர்வளிக் குண்டுகளை வீசித் தாக்குவதின் மூலமாக, இனியும் கம்யூனிஸ்டு ஆக்ரமிப்பு இல்லாது தடை செய்வது.

பெர்லின், ஜினீவா மாநாடுகள்!

ஐ. நா. சபையின் மதிப்பைக் குறைக்கும்!

ஐ. நா. சபையின் செயலாளர் டாக்டர் ஹாமர்ஸ்க்ஜோல்ட், ஐ. நா. சபையின் ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:—

“பெர்லினில் நடைபெற்ற நான்கு வல்லரசுகள் மாநாடும், அதன் தொடர்ச்சியாக, அண்மையில் ஜினீவாவில் நடைபெற்ற ஆசியாவுக்கு சமாதான மாநாடும், ஐக்கிய நாடுகள் சபையின் உறுதியை பலவீனப்படுத்தும் தன்மையன; பொதுவாகவே, உலகப் பிரச்னைகளை, ஐ. நா. சபை அல்லாத வேறு தனிப்பட்ட நிறுவனங்கள் மூலமாக தீர்க்க முயலுவது நல்லதல்ல,' என்றார்

வருகிற செப்டம்பர் 21-ம் தேதியன்று கூடவிருக்கிற ஐ. நா. பொதுச் சபையில் சமர்ப்பிப்பதற்காக தயாரித்துள்ள தனது அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுவதாவது:—

ஐ. நா. சபையல்லாத இதர சாதனங்கள் மூலமாக உலகப் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்வது, விரைவானதாகவும் சௌகரியமானதாகவும் தெரியக்கூடும்; ஆனால் கால போக்கில் அத்தகைய ஒரு எண்ணம் உசிதமானதல்லவென்பது தெரியவரும்.

“இம்மாதிரி உலக விஷயங்களைத் தீர்த்து வைக்க ஐ. நா. சாசனத்தில், எல்லா அரசாங்கங்களும் ஒரு விசேடமான, முதன்மையான பொறுப்பைத் தந்துள்ளன. அதன்படி உலகப் பிரச்னைகளுக்குப் பரிகாரங்காண அந்த ஐ. நா. சபையை நாடாமலோ, சரியான அரசியல் சாதனங்களின்றி வேறு நிறுவனங்களை பிரச்னைகளைத் தீர்க்க ஏற்பாடு செய்வதோ, ஐ. நா. சபையை பலவீனப்படுத்துவதுடன், அதன் செல்வாக்கையும், பலனையும் குறைப்பதாக அமையும்.”

இந்திய போக்குவரத்து அபிவிருத்தி

அமெரிக்கா தரும் உதவி!

இந்திய போக்குவரத்து சாதனங்களின் அபிவிருத்தி செய்வதற்காக அமெரிக்காவின் திட்டம் ஒன்றின்படி 100 'லோகோமோடிவ்' என்ஜின்கள் தயாரிப்பதற்கு ஜப்பானியக் கம்பெனி ஒன்று மிகக் குறைவான விலைப் 'டெண்டரி'ல் குறிப்பிட்டுள்ளதாம்!

அமெரிக்க காங்கிரஸ், இந்தியாவின் போக்குவரத்து சாதனங்களின் அபிவிருத்திக்காக 101 என்ஜின்களும், 5000 ரயில் பெட்டிகளும் செய்து தருவதற்காக [illegible] கோடி டாலர் ஒதுக்கியுள்ளதாகத் தெரிகிறது.

இதையடுத்தே தான் மேற்கண்ட என்ஜின்கள் உற்பத்தி செய்யுமாறு ஜப்பான் கம்பெனி முன்வந்துள்ளதாம்.

அந்த 100 என்ஜின்கள் உற்பத்திக்கு 8,47,000 டாலர்கள் விலை கேட்டுள்ளதாம், ஜப். கம்பெனி!

இதே விலை, பிரிட்டன் கம்பெனி ஒன்றினுடைய விலையில் 7,33,00 டாலரும், அமெரிக்கக் கம்பெனி ஒன்றினுடைய விலையில் 96,79,000 டாலரும் குறைவானதாம்.

போர்த்துகீசிய மந்திரி ராஜிநாமா!

போர்த்துகீசிய நாட்டு நீதி இலாகா மந்திரி டாக்டர் டிபெரய்ரா ராஜிநாமா செய்துவிட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. அவர் 1947ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24ந் தேதியன்று நீதி இலாகா மந்திரியாக நியமிக்கப்பட்டாராம்.

பிரிவினை கீதம் கேட்டு நேருவின் கிலி!

— (:) —

மொழிவழி மாநிலம் அமைப்பது முடியாத காரியம்!

பண்டிதரின் பதட்டமான கடிதம்!

புதுடில்லி, ஆக. 9—

"இந்தியா ஒற்றுமையுடன், ஒன்றாக இருக்கிறது என்பதை உறுதியாக, அசைக்க முடியாது விளங்கும் மத்திய அரசாங்கமே எடுத்துக்காட்டும்; ஆனால், சமூக—பொருளாதார—அரசியல் துறைகளில் ஏற்படும் முன்னேற்றத்தைத்தான் நான், இந்தியாவின் உணர்வு பூர்வமான ஒற்றுமை எனக் கொள்வேன்; வேறு பல பிரச்சினைகள், எத்தனைதான் முக்கியமானவையாயிருப்பினும், இந்த முன்னேற்றத்திற்கு உழைப்பதைத்தான் முதல் பிரச்சினையாகக் கொள்வேன்."

"அரசியலைப் பொருத்தமட்டில் இந்தியா மிகவும் ஒற்றுமையானதாக இணைக்கப்பட்டிருக்கிறது; இந்த ஒற்றுமையை வளர்க்கும் சக்திகள் இன்னும் நிறைய இருக்கின்றன; ஆனால், இந்த ஒற்றுமையை பலவீனப்படுத்தி இந்தியாவை பல பிரிவுகளாகத் துண்டாட முயலும் பிரிவினைச் சக்திகளும் இருக்கத்தான் செய்கின்றன."

"இந்த பிரிவினை எண்ணங்களை வளர்த்து வருபவர்களில் சிலர், காரணத்துடனேயே உள்ள உணர்வு பூர்வமாகச் செய்யலாம்; சிலர் உள்நோக்கமேதுமின்றி அறியாமையினால் செய்யலாம்."

"எனவே காங்கிரசைப் பொறுத்தமட்டில்—ஏன், மற்றவர்களையும் பொறுத்துத்தான், இந்தப் பிரிவினை எண்ணங்கள் வளருவதை சுமூகமானது என்றெண்ணி, வாய்மூடி மௌனிகளாய் இருந்துவிட முடியாது; ஏனெனில், அப்படிப் பிரிவினை எண்ணங்களின் வளர்ச்சிக்கு இடமளிப்பது இந்தியாவின் அழிவுக்கு வழிகோலுவதாக அமையும்; அதுமட்டுமல்லாது, இந்த பிரிவினைச் சக்திகளின் நடவடிக்கைகளை நாம் கவனிக்காதவர்களாக இருந்தோம் என்றும் ஆகிவிடும்."

இவ்வாறு இந்தியாவின் முதல் மந்திரி பண்டித நேரு, அகில இந்திய காங்கிரசின் தலைவர் என்ற முறையில், மாநில காங்கிரஸ் தலைவர்களுக்கு டில்ஹெலிகியிலிருந்து எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

அக்கடிதத்தில் மேலும் அவர் மொழிவழி மாநிலங்கள் பற்றிய தனது கருத்தை தெரிவித்துள்ளார்:—

"ஒரு குறிப்பிட்ட பகுதியில் இன்ன மொழிதான் பேசப்படுகிறது என்று திட்டவட்டமாக வரையறுத்து இந்திய தேசப்படம் ஒன்று வரைய முடியாது என்பது வெளிப்படை. இரண்டு அல்லது பல மொழிகள் ஒரு பகுதியில் பேசப்படுகின்றன. எனவே இந்த மொழி வழிப் பிரச்னையை 'வாழு வாழவிடு' என்ற உள்ளத்துடனும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடனும், சோதர வாஞ்சையுடனும், எல்லோருக்கும் வளர்ந்து முன்னேறுவதற்குச் சுதந்திரம் இருக்கிறது என்ற உணர்வுடனும் அணுகினாலன்றி ஒருவருக்கொருவர், அடித்துக் கொள்வது தவிர்க்க முடியாததாகிவிடும்."

இந்தி அழிப்பு

இளைஞர் காங்கிரஸ், தி. க. தோழர்கள் கைது!

பழனி, ஆக. 9—

பழனி ரயில் நிலையத்தில் உள்ள இந்தி எழுத்துக்களை திராவிடர் கழகத் தோழர்கள் தார் பூசி அழிக்க ஆக. 8-ந்தேதி பன்று சென்றிருக்கின்றனர். அவர்களை, அமைதியான முறையில் தங்கள் கடமையை நிறைவேற்றவொண்ணாது தடுக்க முயன்றிருக்கின்றனர், இளைஞர் காங்கிரசைச் சேர்ந்த சிலர்.

காவல் புரிந்த போலீசார் இதைக்கண்டு, இருபத்திரண்டு இளைஞர் காங்கிரஸ் தோழர்களையும், 11 திராவிடர் கழகத் தோழர்களையும் கைது செய்திருக்கின்றனர்.

புதுக்கோட்டை

எதிர்ப்பாளர் சிலர், தார் கொண்டு பூசிய இந்திப்பட்ட அவமானத்தை மண் எண்ணெய்க் கொண்டு அழிக்க முயற்சித்தனராம்; சோர்வடையாத தோழர்கள் இந்தி மீது தார் பூச்சைத் தொடர்ந்து நடத்தி வெற்றி கண்டனர்.

காரைக்குடி

இவ்வூர் ரயில் நிலையத்தில் உள்ள பலகைகளில் உள்ள இந்தி எழுத்துக்களை திராவிடர் கழகத் தோழர்கள் காலை 4-30 மணிக்கு தார் கொண்டு அழித்துச் சென்றனர்.

திருக்கழுக்குன்றம் பஞ்சாயத்துபோர்டு

திருக்கழுக்குன்றம் பஞ்சாயத்து போர்டு கூட்டம் தலைவர் அ. நடேசன் அவர்கள் தலைமையில் கூடியபோது உறுப்பினர் வி. வேணு அவர்களால் கொண்டு வரப்பட்ட கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:—

காலஞ் சென்ற திரு. வி. க., பெரியார் ஈ. வெ. ராமசாமி அறிஞர் உருவப் படத்தை திறக்க முறையே தி. மு. க. பொதுச்செயலாளர் அண்ணாதுரை, முதலமைச்சர் காமராசரை அழைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. போர்டு உறுப்பினர்கள் 13 பேரில் 11 பேர் ஆஜரானார்கள். தீர்மானத்தை எதிர்த்து 5 உறுப்பினர்கள் வெளியேறினர்; மற்ற 6 உறுப்பினர்களால் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தோட்டத் தொழிலாளர் பொதுக் கூட்டம்

தலைவாக்கொல்லை, ஆக. 10—

1—8—54ல், அமிர்தகங்கை தோட்டத்தின் ஸ்டோருக்கருகாமையில், தோழர் என். பி. வேலைய்யா தலைமையில் தோட்ட தொழிலாளர், அன்சாப்பு தொழிலாளர் யூனியன் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரையில் சங்கம் கொள்கைகளை எடுத்துரைத்தார். தோழர் ஏ. எம். அஸீஸ் தொழிலாளர் கட்டுப்பாட்டுடனும் கண்ணியத்துடனும் நடக்கவேண்டுமென்றார். தோழர்கள் கே. வி. ராசையாவும், கந்தசாமியும் பேசினர்.

காஞ்சீபுரம் மாநாடுகள்

21, 22 சனி, ஞாயிறுகளில் நடைபெறும் செங்கற்பட்டு மாவட்ட மாநாடுகள், கண்ணுக்கும், கருத்துக்கும் அரிய தோர் விருந்தாக அமையும்.

அதற்கான மாபெரும் பந்தல், கண்ணன் டாக்கீஸ் மைதானத்தில் போடப்பட்டு வருகிறது. பந்தலிலேயே தனிப்பட்ட முறையில் உணவு வசதி கிடைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

புத்தக ஸ்டால்களும், கடைகளும் வைக்க விரும்பும் வெளியூர் தோழர்கள் 15-ந் தேதிக்குள் தங்கள் விருப்பத்தை தெரிவித்தால் ஆவன செய்யப்படும்.

★

கிளைக் கழகங்களுக்கு!

ஆங்காங்கும் மாநாடு சம்பந்தமான விளம்பரங்களை, துண்டு நோட்டீசுகள் மூலமும், அட்டைகள் மூலமும் விளம்பரம் செய்யும்படி மாவட்டக் கிளைக் கழகங்களை வேண்டிக் கொள்கிறோம்.

முதல் நாளிரவு 'சந்திர மோகன்' நாடகமும், இரண்டாம் நாளிரவு 'அம்மையப்பன்' நாடகமும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நடிகத் தோழர்கள் எஸ். எஸ். ராசேந்திரன், டி. வி. நாராயணசாமி குழுவினர் பங்கேற்கிறார்கள்.

அரிய காட்சி! உரிய பங்கைச் செலுத்த ஒவ்வொருவரையும், அன்புடன் அழைக்கிறோம்

★

கட்டணம்

வரவேற்புக் குழுவினர் ரூ. 5; பிரதிநிதிகள் ரூ. 3; பார்வையாளர் ரூ 1; பார்வையாளர் இரண்டு நாட்களுக்கும் ரூ. 1—8—0; தாய்மார்களுக்கு அணா 8.

குறிப்பு:— ஆதரவாளருக்கும், நன்கொடையாளருக்கும் தனி வசதி செய்யப்பட்டிருக்கிறது.

வருக! வருக!! கருத்து விருந்து பெற வருக!!!

—வரவேற்புக் குழு.

மக்கள் சினைவைக் காண வெள்ளையர் பயணம்!

இங்கிலாந்தின் முன்னாள் முதன் மந்திரி அட்லி, பெவான் உள்ளிட்ட முக்கியமான சோஷலிஸ்டுகளின் நல்லெண்ணத் தூதுக் குழு செஞ்சீனாவிற்கு வரும் திங்களன்று விமான மூலம் பயணமாவர் எனத் தெரிகிறது. ஐந்தாண்டுகளுக்குமுன், கம்யூனிஸ்டுகள் சீனாவைக் கைப்பற்றிய பிறகு முதன் முறையாக அங்கு செல்லும் அரசியல் தூதுக் குழு, அட்லி தலைமையில் செல்லும் இங்கிலாந்து நாட்டவர் தான்!

அன்பளிப்பு

பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் காரைக்குடிக்கு வந்திருந்தபோது அகருக்கும் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்களுக்கும் "முடியரசன் கவிதைகள்" என்ற தமிழ் நூல் அன்பளிப்பாக அதனை ஆக்கிய தோழர் முடியரசன் அவர்களால் கொடுக்கப்பட்டது.

கவர்னர் சம்பளப் பிரச்னை: கண்ணியர்கள் கருத்துரை

கவர்னருக்கு இப்போது தரப்படும் இலட்சக்கணக்கான ரூபாய் சம்பளம் சரிதானா? அதைக் குறைக்கப் போராட்டம் நடத்த வேண்டுமென்று தி. மு. கழகம் பொதுச் செயலாளர் கூறியது தவறா? என்பது பற்றி வாசகர்களை 'கருத்துரை அளியுங்கள்' என்று கேட்டிருந்தோம். கருத்துரைகள் கொண்ட கடிதங்கள் குவிந்த வண்ணமுள்ளன! அவைகளில் சில முன்னர் வெளியிட்டிருந்தோம். தொடர்ந்து இன்றும் வெளியிடுகிறோம்!

ஐயா,

தமிழகமெங்கும் பட்டினிப் பட்டாளங்களின் பட்டியல்கள் பெருகிக் கொண்டேவரும் இக்காலில் ஆடம்பர பொது பொம்மையான வடநாட்டு கவர்னருக்கு, ஆண்டொன்றுக்கு ரூ 10 லட்சம் ரூபாய் சம்பளம் தேவையா? இப்படிக் கொள்ளைச் சம்பளம் பங்கிட்டுக் கொள்ளவா இந்நாடு சுதந்திரம் பெற்றது? சுதந்திரத் தீயில் உயிர் நீத்த தலைவர்களின் கல்லறை. இதைக்கண்டு கண்ணீர் வடிக்கும்! இதை நினைத்தாவது, இந்த மாநில கவர்னரின் சம்பளத்தை இந்த அரசாங்கம் குறைக்க வேண்டும் இல்லாவிடில், அறப்போர் நடத்துவதே திராவிடரின் தன்மானமாகும்!

இரா. கிருட்டிணன்
பாலக்காடு

★

ஐயா,

கவர்னர் பிரகாசா சென்னை வருவதற்கு ஒரு நாள் முன்னதாக அங்கு நண்பர்கள் அவருக்கு அளித்த விருந்தில், 'நான் ஒரு கைதியைப்போல் தென்னாடு செல்கிறேன்,' என்று கூறினார். இதைக் கண்டித்து தி. மு. கழகம் எழுதியது, பேசியது.

கைவல் வாணிபத் துறையில் வந்து நாட்டை அடிமைப்படுத்தினான்: பிரகாசாவோ கவர்னர் பதவியில் வந்து திராவிடர்களின் வரிப்பணத்தை லட்சக் கணக்கில் தனி ஒரு மனிதனுக்கு சுரண்டிச் செல்கிறார். மேலும் திராவிடரை அடக்கி அடிமைப்படுத்தப் பார்க்கிறார்.

கவர்னர் சம்பள குறைவும் போராட்டம் நடந்தே தீரவேண்டும்! அறப்போர் நடைபெற்றே தீரவேண்டும்!

ஞானப்பிரகாசம்
பொள்ளாச்சி

★

ஐயா,

பத்து லட்சம் ரூபாயை கவர்னருக்கு சம்பளமாகக் கொடுக்க இது பணக்காரர் நாடல்ல! பஞ்சம் நிறைந்த நாடு! எனவே கொள்ளைச் சம்பளம் கொடுக்கப்படுவதைத் தடுக்கவேண்டும்.

14 தோழர்கள்
பொள்ளாச்சி

★

ஐயா,

வடநாட்டு சாண்டல் திட்டங்களை மத்திய அரசியலார் பலத்த அறைகளிலும் அமுலாக்கி வருகின்றனர். அப்பல வழிகளில் ஒரு வழிதான "கவர்னர் சம்பளம்" என்ற பெயரால் கொள்ளை கொள்ளும் வழியினை திராவிடர்கள் கண்டிக்கிறார்கள்—எதிர்க்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டவும், அதற்கு பணியவைக்கவும் போராட்டம் தேவை!

பெ. நடேசன்
அம்மாப்பேட்டை

★

ஐயா,

—நம் மாநில மக்கள் பசியாலும் பட்டினியாலும் வாடிக்கொண்டிருக்கும்போது, ஒரு தனி மனிதனுக்கு ரூ 10 லட்சம் தேவைதானா? கவர்னர் சம்பளக் குறைப்பு போராட்டம் நடக்கால் அதற்கு எங்களாலான உதவியை செய்யத் தயாராயிருக்கிறோம்.

மு. ஜீவரத்தினம்,
கி. சா. சயராம்,
இளங்கோவன்,
ஐ. மகாதேவன்,
சென்னை—1.

ஐயா,

"சுதந்திர இந்தியாவில் கவர்னர்கள் குடிசையில் குடியிருப்பார்கள்; அவர்களுக்கு ரூ. 500-க்கு மேல் சம்பளம் இருக்காது," என்று உத்தமர் காந்தியார் சொன்னார் அன்று!

இன்று, அந்த உத்தமர் வாரிசு நேரு பண்டிதரின் ஆட்சியில் தான், ஒரு மாநில கவர்னருக்கு 10 இலட்சம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆனால், அந்த கவர்னரின் வேலையோ, 'ஒரு போலீஸ்காரர் செய்யும் வேலையைவிட குறைவானது என்று சொல்லிக் கொள்கிறார் நம் நாட்டு கவர்னர் எனவே, போராட்டம் மிக மிக அவசரம்!

சு. துவாரகநாதன்,
சின்னாளபட்டி.

★

ஐயா,

அண்ணா அவர்கள் அறிவித்தபடி, கவர்னர், சம்பளத்தை அவரும் குறைத்துக் கொள்ள வேண்டும்; இல்லாவிட்டால், நம் போராட்டத்தின் மூலம் குறைத்துக் கொள்ளும்படி செய்ய வேண்டும்.

இந்தியா பூராவிலும் உள்ள மாகாண கவர்னர்களுக்கும் அதே சம்பளம்தான்; ஆனால், வேறு மாகாணத்தவர்கள் கிளர்ச்சி செய்யவில்லை; நாம் செய்கிறோம் என்றால் விழிப்புணர்ச்சி அடைந்திருக்கிறோம் என்பதையே அது காட்டும்.

அண்ணா அவர்களின் கட்டளைக்காக, ஆயிரமாயிரமாக இளைஞர் பட்டாளம் எதிர்நோக்கி இருக்கிறது.

என் தங்கவேலன்,
நல்லாகுளம், மதுரை.

★

ஐயா,

சந்தை ஓரங்கள், சாலை ஓரங்கள், ஏன் சந்திக்கும் 'ஐயா காலணா; சாமி காலணா; கண்ணில்லாதவன் சாமி'—இப்படி எத்தனையோ 'ஐயா, ஐயா' காலணாக்கள் வாழும் நாட்டிலே ஒரு தனி மனிதனுக்கு இலட்சக் கணக்கில் சம்பளம் ஏன்?

மு. சி. பொன்னநல்,
மூணாறு.

★

ஐயா,

கவர்னரின் சம்பளக் குறைப்பு போராட்டம் நடத்துவதை வரவேற்கிறேன்.

நம்மை அடக்கி ஆண்டுவரும் மத்திய சர்க்காரின் பொம்மைப் பிரதிநிதியாக இருந்துகொண்டு ஆடம்பர வாழ்க்கை நடத்தி வரும் கவர்னரின் சம்பளத்திற்கு லட்சக் கணக்கில் பொதுமக்களின் வரிப்பணத்தை வாரித் தருகிறது நம் சர்க்கார். எனவே, அதைக் குறைப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் நல்லதொரு போராட்டம் நடத்துவது அவசியமானதே! அத்தகைய போராட்டம் நடத்துவதற்கு எனது எண்ணங்கள் சிலவற்றையும் எடுத்துக்கூற விரும்புகிறேன்:

சட்ட சபையிலும் பாராளு மன்றத்திலும் இதுபற்றி எடுத்துப் பேசி தீர்மானங்களைக் கொண்டுவரவும் முயற்சி செய்ய வேண்டும்; கவர்னரிடமே நேரில் சென்று விளக்கிட தி மு கழகச் சார்பில் தூதுக் குழு ஒன்றும் செல்லவேண்டும்; சர்வ கட்சிப் பிரதிநிதிகளின் சார்பிலும் தூதுக் குழு ஒன்றும் செல்ல வேண்டும்.

மு. பூங்கமணி
சென்னை—இராயப்பேட்டை

அண்ணு சொற்பொழிவு......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டுச் செல்வார்கள், இந்த வட்டத்துத் தோழர்கள்! எங்களிடையே அப்படி வளர்ந்தது, பாசம், நிறைக்குள்! அந்தப் பாசத்தின் காரணமாக, என்னை இந்த வட்டத்தில் வந்து அவர்கள் கழகத்தைக் கட்டிக் காத்து, ஆர்வத்தோடு பணி புரிவதைப் பாராட்டவும், பொதுமக்களை ஆதரவைத் தொடர்ந்து தருமாறு வேண்டிக்கொள்ளவும், சொல்லவும், சொற்பொழிவாற்றமாறு அழைக்க சகல உரிமையுமிருக்கிறது, அத்தோழர்களுக்கு! உங்களிலே பலருக்கு இப்போது கிடைக்காத அந்தப் பாசம், அடுத்த முறை நிச்சயம் கிடைக்கும்!

இன்றைய தின இதழ் ஒன்றில் காமராசர் உருவம் ஒன்றை வரைந்து, அவரது சட்டையில் உள்ள நான்கு பைகளிலும் நான்கு கட்சிகளைத் திணித்து ஒரு படம் வரையப்பட்டுள்ளது; ஒரு பையில் பெரியார் ராமசாமியும், இன்னொரு பையில் நானும், மற்றொன்றில் பி சோ. கட்சியும், இன்னொன்றில் லீக் கட்சியுமாக வரைந்து, கம்யூனிஸ்டுகளைத் தனியாக எதிரே நிறுத்திப் படம் வரையப்பட்டுள்ளது; அதன் கீழே, 'கம்யூனிஸ்டு அல்லாத மற்றக் கட்சியினர் எல்லாம் ஒன்றுபட வேண்டும் எனக் காமராசர் தஞ்சையில் கூறினார் என்ற செய்தி வெளிவரவில்லையா,' என்றும் எழுதப்பட்டிருந்தது.

'ஏது, இவர்களெல்லாம் ஒரு முறை விட்டுவிடுவார்களோ?' என்று பயந்து, இப்படிச் சேலைச் சித்திரம் வரைந்தால் ஒரு வேளை பிரிந்துவிட மாட்டார்களா என்ற சபல புத்தியாலோ, அல்லது, காமராசர் தனது திறமையால் இந்தக் கட்சியினரை எல்லாம் தனது சட்டைப் பைக்குள் பிடித்துப் போட்டுவிட்டார் என்ற எண்ணத்தாலோ அந்தச் சித்திரத்தை வரைந்திருக்கக்கூடும்; ஆனால் அந்தச் சித்திரமே தவறானது!

நான் காமராசரைக் கண்டிருக்கிறேன்; அவர் போட்டிருக்கிற சட்டை முழு நீளக்கை உடையது அல்ல; அரைக் கை சட்டைதான் அவர் அணிந்திருக்கிறார்; மேலும் அவர் சட்டையில் நான்கு பைகள் இல்லை; ஒரு பைதான் இருக்கிறது; ஒரு பையுள்ள சட்டை அணியும் மனிதரால், நான்கு கட்சிகளை தன்பைக்குள் போட்டுக் கொள்வதென்றால், எங்களிலே பலர் இரண்டு பைகளையுடைய சட்டை அணிபவர்கள் — இரண்டு பைகளிலும் எங்களால் எட்டுக் கட்சிகளை உள்ளே போட்டுக்கொள்ள முடியவேண்டும் அல்லவா?

காமராசரின் திறமையைத் தெரிந்து கொண்டிருக்கிற அந்தச் சித்திரக்காரருக்கு, அவர் அணியும் சட்டை இன்னவகையானது என்பது தெரியாமற்போனது ஆச்சரியம்தான்!

இம்மாதிரி எல்லாம் அவர்கள் நடந்து கொள்வதற்குக் காரணம், இந்த நாட்டின் நிலையும் அரசியல் நிலையும் அவர்கள் தெரிந்து கொள்ளாதவர்கள் என்பதுதான்!

காமராசரின் சட்டைப் பைக்குள் இருப்பதாகத் தீட்டப்பட்டுள்ள மற்ற மூன்று கட்சியினர் எப்படியோ? அதைப் பற்றி பேச நான் அருகதை அற்றவன் தி. மு. கழகத்தைப் பற்றி மட்டும் பேச எனக்கு அதிகாரம் அளிக்கப் பட்டிருப்பதால் தி. மு. கழகத்தின் நிலைபற்றி மட்டும் சொல்லிவிட விரும்புகிறேன்.

தி. மு. கழகம் கொள்கைக்காகத் தோற்றுவிக்கப்பட்ட கட்சியே அன்றி, கட்சிக்காக அதன் கொள்கை தோற்றுவிக்கப் படவில்லை. 'கட்சி என்ற ஒன்று வைத்திருக்கிறோமே, அதற்கு ஒரு கொள்கையும் லட்சியமும் வேண்டாமா?' என்றெண்ணி, தோற்றுவிக்கப்பட்டதல்ல, 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற கொள்கையும், லட்சியமும்!

இந்த நாட்டு மக்கள் திராவிடர்கள்; 'வாழ்ந்தவர்கள்,' என்று வரலாறு சொல்லிற்று! வரலாறும், சிலாசாசனமும் நமக்குச் சொல்லுகிறபடி வளமாக, சுதந்திரமாக வாழ்ந்த இனம், இன்று அரசியல் சட்டப்படி அடிமை ஆக்கப்பட்டிருக்கிறது! அந்த இனம், தொழில் வளர்ச்சியின்றி கேட்பாரற்றுக் கிடக்கிறது! அந்த இனத்தின் சுயமரியாதை பறிக்கப்படுகிறது! அந்த இனத்தின் அரசியல் தன்மானம் தரை மட்டமாக்கப்பட்டுக் கிடக்கிறது! அந்த இனம் தரித்திரத்திலே தள்ளப்பட்டுக் கிடக்கிறது! தமிழ் மகன் உலகெங்கும் இழிவுபடுத்தப்படுகிறான்! இந்த நிலை கண்டு மனம் நொந்து, உளம் வெதும்பி, பல முறை எண்ணி எண்ணி, ஏங்கித் தவித்து, இந்த இழி நிலை போக்க திட்டங்கள் பல தீட்டி, இறுதியாக, 'திராவிட நாடு திராவிடருக்காக்கப்பட்டாலன்றி, இந்த நாட்டவர் கலிவு நீங்காது,' என்பதைக் கண்டு அந்தத் திராவிடத்தை திராவிடருக்காக்குவதையே லட்சியமாகக் கொண்டு, லட்சியத்தை ஈடேற்றக் காணப்பட்டது தான் தி. மு. கழகம்!

ஆகவே, காமராசர் என் சாதனை காட்டுவதாலேயே லட்சியத்தை விட்டுவிடமாட்டோம்!

காமராசர் விரும்பும் ஒற்றுமை அவசியமானது என்றும், எமது லட்சியம் அதனினும் மிக, மிக அவசியமானது!

காமராசர் நல்லது செய்தால், நாமும், நல்லவர் பலரும் பாராட்டத்தான் செய்வோம். ரூபாய்க்கு நான்கு படி அரிசி தருவாரா!—நாட்டவரைப்போலவே நாமும் வாழ்த்துவோம்—'நீடூழி வாழ்க' என்று!

தெருவெல்லாம் வெளிச்சம் தெற விளக்குப் போடுகிறாரா!—நாமும் பாராட்டுவோம் 'புண்ணியவான்; பல நாள் வாழட்டும்,' என்று! ஆனால், 'கழகத்தை விளக்குப் போடுகிறேன்; இன்று உன் மடியிலிருப்பதைக் கொடு' என்று அடிமடியைப் பிடித்தால்—'ஐயா! ஆபத்தான பேர் வழி!' என்போம்!

காமராசர் மட்டுமல்ல—ஆச்சாரியாரே, மக்களுக்கு நன்மை செய்தால் பாராட்டுவோம். ஆச்சாரியாரால் முடியுமா என்பீர்கள்? செய்வதானால் வைத்துக் கொள்வோம்—நிச்சயமாக அவரையும் பாராட்டுவோம்; பாராட்டியும் இருக்கிறோம். அவர் ஆட்சியில் இருந்த காலத்தில், இரண்டொரு நல்ல காரியங்களை, அவர் நம்மோடு வம்புக்கு வராத வரையில், நாமும் அவரை வம்புக்கு இழுக்கவில்லை என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். தஞ்சை பண்ணையாள் சட்டம் கொண்டுவந்தார் — பாராட்டினோம்! ஆகாத கல்வித் திட்டத்தைக் கொணர்ந்தார்—எதிர்த்தோம்! எனவே, நமக்கு ஆள் அல்ல முக்கியம் —ஆள்பவர்கள், மக்களுக்குச் செய்யும் காரியம்தான் நமக்கு முக்கியம்!

கழகக் கூட்டம்

★

கொல்லப்பட்டிபுதூர் (தருமபுரி)

12—8—54 வியாழன் மாலை

பேசுவோர்:
என். வி நடராசன்
ராமசாமி
டி. எம். குப்புசாமி

தி. மு. கழகத்திற்கு மூன்று பெரிய காரியங்களைச் செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு இருக்கிறது— மக்களைத் திருத்த வேண்டும்; சர்க்காரின் போக்கு தவறாக இருந்தால் திருத்த வேண்டும்; சொந்த சர்க்கார் அமைக்க வேண்டும்.

இம்மூன்றையும் நாம் செய்தாக வேண்டும்; ஏதாவது ஒன்றில்லாவிடினும், அது சரிப்படாது!

'அல்லி - அர்ஜுனு' நாடகம் நடத்த வேண்டுமானால் நாடக மேடை வேண்டும்; மேடையின் ஆட ஆள் வேண்டும், ஆடுவதைப் பார்க்க மக்கள் வேண்டும்; இதில் ஏதேனும் இரண்டு இருந்து, மற்றது இல்லாவிட்டால் நாடகம் ஆட முடியுமா? அல்லது ஏதாவது ஒன்றுமாக, மற்றது தேவை இல்லை என்று தான் சொல்ல முடியுமா?

வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு—இம்மூன்றும் இருந்தால்தான் சுவைக்க முடியும்; ஆனால், வெறும் சுண்ணாம்பை மட்டும் வாயில் போட்டால் வாய் வெந்துவிடாதா?

'வெற்றிலை மட்டும் போதும்,' என்று எண்ணி மென்று தின்றால், சாதாரண ஆட்டு மாடுகளுக்கும் மனிதருக்கும் அதிகம் வேறுபாடு இல்லாமலல்லவா போய் விடும்?

வெறும் பாக்கை மட்டும் தின்பது என்றால், மார் அடைத்துக் கொள்ளும்.

எனவே, இம்மூன்றையும் ஒன்றாகக் கூட்டினால்தான் சுவை. அளவோடு கூட்ட வேண்டும் என்பதையும் மறந்துவிடலாகாது!

இன்னொரு உதாரணமும் சொல்கிறேன்:—

ஒருவனுக்கு வயிற்று வலி வருகிறது; வைத்தியனிடம் செல்கிறான்; வைத்தியரும் பரிசோதித்துவிட்டு, 'என்ன சாப்பிடுகிறாய்?' என்று கேட்கிறார்; ஏதோ ஒரு ஓட்டலில் சாப்பிடுவதாகக் கூறுகிறான்; அங்குள்ள பொருள்கள் காரமாக இருப்பதையும் சொல்கிறான்; உடனே டாக்டர், 'ஓட்டலில் நீ சாப்பிடும் பொருளில் உள்ள மிதமிஞ்சிய காரம்தான் வயிற்று வலிக்குக் காரணம்; எனவே, சாப்பிடும் ஓட்டலை மாற்று,' என்கிறார்; புதிய ஓட்டலில் பொருள்கள் காரக்குறைவாயிருப்பதால், நோயாளிக்குவயிற்று வலி நின்றது; என்றாலும், என்றென்றைக்கும் ஓட்டலில் சாப்பிடுபவராகவே இருக்க வேண்டும் என்று எவரும் விரும்ப மாட்டார்கள்; 'நமக்கென்று ஒருத்தி வந்து, நாம் வாங்கித் தரும் அரிசி, பருப்பைச் சமைத்து, நாவிற்கு சுவையாய், கனிவோடு உணவு தரும் நாள் என்று வரும்,' என்று எண்ணி ஏங்கிக் கொண்டுதான் இருப்பான் அது இயற்கையும் கூட!

அதைப் போலவே, ஆச்சாரியார் ஆட்சி — காரமான உணவு, வயிற்று வலியைத் தந்தது போல, இந்த நாட்டு மக்களுக்கு கேடுகளைத் தர ஆரம்பித்தது; ஓட்டல் மாற்றப்பட்டது; காமராசர் கடையே கொஞ்சம் காரமில்லை!

ஆனால், 'சொந்தச் சாப்பாடு நிச்சயமாகத் தேவை' என்று எண்ணுவது போன்றே, நமக்கென நாடும், அந்த நாட்டு ஆட்சி நம் கையிலும் இருக்க வேண்டுமென்பதும் இன்றியமையாதன!

ஆகவே, தி. மு. கழகம், அந்த நமக்கேஏறிருக்கும் நல்லாட்சி சுதந்திரத்தைப் பெறுகிற வரையில், ஓயாது; அயராது; உறங்காது; அல்லது ஒழிந்தும் விடாது!

நான் ஆரம்பத்தில் கூறியது போன்று, யார்மீதும் நாம் திடீர் திடீரெனப் பாயமாட்டோம்!

வெள்ளைக்காரர்களை Bull dog போன்றவர் என்று சொல்வார்கள்; அமெரிக்கா வைப்போல் கண்ட கண்ட இடங்களில் கைவைக்க மாட்டார்கள்; பிரெஞ்சுக்காரர்கள் போல், பலப் பல இடங்களிலும் பிடிவைத்துக் கொண்டு அவஸ்தைப்பட மாட்டார்கள்; ஆனால் வெள்ளைக்காரர்கள், பிடித்த இடத்தையும் சுலபத்தில் விடமாட்டார்கள்!

மலையாளவைப் பாருங்களேன்—அவர்களை Bull dog என்று சொல்வதற்குக் காரணம், அதுதான்! Bull dog ஓயாமல் குரைத்துக் கொண்டே இருக்காது. எதையும் கண்டவுடன் திடீர் திடீர் எனக் குரைக்காது; ஆனால் குரைத்துவிட்டு, ஒரு பொருளைக் கவ்விக் கொண்டால், கவ்விய பிறகு, பிடியை விடவே விடாது.

நாமும் அதே போலத்தான்— யாரையும், எதையும் திடீரென முடிவுகட்ட மாட்டோம்; ஆனால் தீர்க்கமாக, பலமுறை சிந்தித்து எடுக்கப்பட்ட முடிவை, யார் எந்த எலும்புத் துண்டை வீசினாலும் விட மாட்டோம்; அதற்குக் காரணம், நமது திறமை அல்ல; மாறாக, நமது லட்சியம் சுலபத்தில் விட்டுவிட முடியாத அளவு மிக மிக உயர்ந்ததாகும்.

நாம் நமக்கென்று நமது இனத்திற்கென்று ஒரு அரசாங்கம் பெறுகிற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்; ஆனால், அதற்காக அந்த அரசாங்கத்தைப் பெறுகிற வரையில், இடைக்காலத்தில் இருக்கிற ஆட்சி பீடம் மக்களுக்கு கொடுமை விளைவித்தால் அதைத் திருத்த முற்படுவோம்;

இந்த நாட்டில் கொடுமை புரியும் சர்க்காரைக் கண்டிக்க, திருத்துவதில் நாம் தான் முன் நிற்கிறோம்.

அரசாங்கம் விதிக்கும் அநியாயமான வரிகள், புகுத்தும் புதுப் புது திட்டங்கள் இவை கண்டு நமக்குத்தான் வதை வதைப்பும், ஆத்திரமும் வருகிறது; நாம்தான கண்டிக்கிறோம்; திட்டங்களை எதிர்த்தும் போர் புரிகிறோம்; அப்படித் திட்டங்களை எதிர்க்கும் போது, அரசாங்கம் அள்ளி வீசும் அடக்குமுறை அம்புகளைத் தாங்கியும் கொள்கிறோம்; தியாகத் தழும்பேற்கிறோம்.

திராவிடர்கள், தங்கள் நாட்டை தாங்களே கட்டி ஆண்டவர்கள்; கடாரம் கடந்தவர்கள்; யவனத்திற்கும், சீனத்திற்கும் எத்தனையோ பொருள்களை ஏற்றுமதி செய்தவர்கள்!

திராவிடத்தில் ஒரு காலம் இருந்தது — திராவிடத்தை ஆண்ட முடிதரித்த மன்னர்களின் ஆட்சிச் சிறப்பைப் புலவர்கள் பலரால் காவியமாக்கப்பட்டுள்ளது; அந்தப் புலவர்கள் எழுதிய கவிதைகளை மக்கள் புரிந்துகொள்ளும் அறிவைப் பெற்றிருந்தார்கள்; அந்தப் புலவர்களைப் போற்றும் பாவலர்கள் இருந்தார்கள்; பாவலர்களை மக்கள் ஏற்றிப் போற்றினார்கள்; அந்த மக்களை, மாநிலமெங்கும் உள்ளவர்கள் மதித்தார்கள்!

நாட்டை கட்டி ஆண்டவர்கள் திராவிடர்கள்; ஆகவேதான் இன்றும் நம்மை நாமே ஆள வேண்டும் என்கிறோம்!

கடலிலே பெரும் மரக்கலங்கள் செலுத்தியவர்கள் நாம்; ஆகவேதான், இன்று, நமக்குக் கப்பல்கள் தேவை என்கிறோம்!

படைகள் பல நடத்திச் சென்றவர்கள் நாம்; எனவேதான், நம் நாடு நமக்கு ஆகப் படை திரட்டுகிறோம்!

மொழியை வளர்த்தவர்கள் நாம்; ஆகையால்தான், இன்று. நம் மொழிக்கு ஊறு ஏற்படும்போதெல்லாம் போர்க்களம் புகுகின்றோம்!

வழ்ந்து கெட்டவர்கள் நாம்; ஆகவேதான், இன்று, நாம் வாழ விரும்புகிறோம்!

தி. மு. கழகம், இழந்த வாழ்வை மீண்டும் திராவிடருக்குப் பெற்றுத் தர தோற்றுவிக்கப்பட்டது.

தி. மு கழகத்தின் வேலை என்ன? பார்ப்பனரைத் திட்டுவதா? அல்ல! அல்ல!! அவர்களைத் திருத்துவது!

அதோடு முடிந்ததா என்றால், இல்லை!

சர்க்காரைக் கண்டிப்பதா? கண்டிப்பது மட்டுமல்ல, அதன் வேலை! இன்னும் இருக்கிறது. அது என்ன வேலை? அதுதான், நமக்கென ஒரு அரசு காண்பது— திராவிட நாட்டை திராவிடருக்காக்குவது!

எனவே, இந்த மகத்தான வேலையில் ஈடுபட்டிருக்கும் நாம், யாருடனும் பின்னேடும் பிள்ளையாகப் போக மாட்டோம்! காங்கிரசின் பின்னாலோ, காமராசர் பின்னாலோ, அன்றி கம்யூனிஸ்டுகளின் பின்னாலோ நிச்சயமாகப் போகமாட்டோம்.

பெற்று வளர்த்த பெரியார் அவர்களே தவறு செய்தார் என மனமார உணர்ந்த காரணத்தால், தந்தையென்றும் பாராது, தனித்துவந்துவிட்ட இந்த 'போக்கிரி' பிள்ளைகளா வேறு ஒருவர் பின்னால் போவார்கள்; போக மாட்டார்கள்! போகக் கூடாது!!"

திராவிட முன்னேற்றக் கழக[illegible] ... தோழர் இரா. செழி[illegible] செழியன், எம். ஏ., அவர்[illegible] ... அறிவகம் அச்சகத்[illegible] ... சாராயண செட்டித் தெரு[illegible] (இராயபுரம்) வெளியிடப்பெ[illegible] ... ஆசிரியர்: இ. என்[illegible] அண்ணுதுரை எம். ஏ.